# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00
மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)



பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தன்னம்பிக்கைத் தமிழ் |
| பொருள் | : | தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனை தொடர்பான கட்டுரைகள். |
| பதிப்பாசிரியர் | : | முனைவர்.ச.மகாதேவன்<br>தமிழ்த்துறைத் தலைவர் |
| இணைப்பதிப்பாசிரியர்கள்: | | திரு.அ.மு.அயுப்கான்<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>முனைவர் அ.சே.சேக்சிந்தா<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>திரு.ஜெ.குமார்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை |
| பதிப்பு | : | செப்டம்பர் 2016 |
| உரிமை | : | தமிழ்த்துறை,<br>சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி) |
| ISBN | : | 938597756-3 |
| மொழி | : | தமிழ் |
| தாள், அளவு | : | காப்பியர், |
| பக்கங்கள் | : | 109 |
| விலை | : | ரூ.170/– |
| வெளியீடு | : | ஷான்லக்ஸ் பதிப்பகம்<br>61/66, வி.பி.காம்ப்ளக்ஸ், டி.பி.கே.மெயின் ரோடு<br>மதுரை |
| கணினி அச்சாக்கம் | : | கா.மானேந்தியப்பன்<br>காசி கணினிக் கலையகம்<br>41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை<br>கைபேசி : 9443614556 |

# வள்ளுவரின் ஊழ்க்கொள்கையும் தன்னம்பிக்கைச் சிந்தனையும்

முனைவர் நா. ரேணுகா
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி மதுரை

மனித இனத்தின் வாழ்வைச் செம்மையாக்கும், நெறிப்படுத்தும் உயரிய நூலாக வள்ளுவம் விளங்குகிறது. காலம் கடந்து, காலத்துடன் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஒப்பற்ற நூலாகும். அறவுரைகள் நிறைந்த அறநூல் மட்டுமன்று, தனிமனித முன்னேற்றத்தை இயம்பும் தன்னம்பிக்கை நூலாகவும் திகழ்கிறது. சோர்வடைந்து வீழ்ந்தோரையும் தட்டி எழுப்பி, வழி நடத்தும் வல்லமை குறளுக்கு உண்டு. வாசிக்கும்தோறும் வாழ்வை வளமாக்கும் தன்னம்பிக்கைக் குறள்களை ஆழ்ந்து நோக்குங்கால் வள்ளுவரின் உயர்ந்த கொள்கை புலனாகும்.

தமிழிலக்கியங்களில் சமயக் கொள்கை மேலோங்கிய காலத்தில், மனிதனின் முயற்சிகளை மழுங்கச் செய்யும் 'பழவினை' எனும் விதிக் கொள்கைகள் 'ஊழாக' உயர்த்திப் பிடிக்கப்பட்டன. சமயவாதிகள் கையிலெடுத்த மிகப்பெரிய ஆயுதமாக 'ஊழ்' விளங்கியது. இதைக் கொண்டே மக்களைக் கட்டுக்குள் வைத்திருந்தனர். இயற்கையைப் போற்றிய சங்கப்பாடல்களில் 'ஊழ்' விதிக் கொள்கையாக ஆளப்படவில்லை. 'முறை', 'ஒழுங்கு', 'இயற்கை' என்ற பொருள்களிலே கையாளப்பட்டன. இதே கருத்தாக்கங்களில் தான் வள்ளுவரும் 'ஊழ்' என்பதை அணுகியுள்ளார்.

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" (குறள். 374)

என்ற குறளில் பயின்று வரும் 'உலகத்து இயற்கை' என்பது வள்ளுவரின் ஊழ்க் கொள்கையின்பாற் பட்டது. ஆனால் வள்ளுவரின் கருத்துக்குப் புறம்பாக உரையாசிரியர்கள், ஊழானது முன் செய்த வினையால் விளைவது எனும் கருத்தைப் புகுத்தினர். இது வள்ளுவரின் கொள்கைக்கு மாறானது; புறம்பானது. மணக்குடவர் மட்டும் 'ஊழ்' என்பதற்கு உலகஇயல்பு என்று பொருளுரைக்கிறார்.

"ஊழின் தோற்றத்திற்குக் காரணம் பலப்பல இடத்தானும் காலத்தானும் அரசானும் சமூகத்தானும் சுற்றுப்புற மக்களானும் வரும் புறநிலைப் பாங்கனைத்தும் முடிவில் ஞாலத்தியற்கையாய் ஊழாய் மாறி நிற்கும் காரணப் பன்மை சான்ற ஊழ் நுண்ணிய பல விரிவுகளாய்க் கிளைப்பது தூய பேரறிவு இல்லா மக்கள் பலரின் கணிப்பிற்கு அப்பாற்பட்டது." (வ.சுப.மாணிக்கம், வள்ளுவம், ப.34) எனும் கருத்து நோக்கத்தக்கது.

வள்ளுவரின் ஊழானது மனிதனின் புறம் பற்றி எழுவதாகும். மனித முயற்சியால் மாறுபாடான விளைவைத் தருவது. தொடர் முயற்சியால் வெற்றியைப் பெற முடியும் பாங்குடையது. இதன் பின்னணியில்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" (குறள். 620)

எனும் கருத்தை நுணுகி ஆராய்ந்தால், 'உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' மனிதனின் புறக் காரணங்களால் ஏற்படும் ஊழை மாற்றுவதுடன் ஊடாடிச் செல்லும் வல்லமையைப் பெறுவர் என்பது பெறப்படுகிறது.